REGD. NO: M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தன்மானக் கழகத்தின் அன்பளிப்பு

★

மத்திய அரசாங்கப் பணிமனைகளில் ஊழியம் புரியும் நண்பர்களின் கூட்டு இயக்கமாகிய 'தன்மானக் கழக'த்தின் சார்பாக, தலைமைக் கழகத்திற்குச் சுவர்க் கடிகாரம் ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—(காலங்காட்டி கிடைக்கப் பெற்றேம். நன்றி—ஆ-ர்.)

மலர் 5] சென்னை: புரட்டாசி 30௳ புதன் (16—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 1௳ வியாழன் (17—10—57) [இதழ் 106

'ஒருமுகப்பட்டு எதிர்ப்போம் வாரீர்'

'இந்திப்பிரச்சினைமிகபயங்கரமானது; பேராபத்தைத் தரக்கூடியது'

'நம் எதிர்காலச் சந்ததியைப் பாழாக்கக் கூடியது'

'அதை எதிர்க்க நம்முடைய பேதாபேதங்களை ஒதுக்கிவைப்போம்'

அரசியல் கட்சிகளுக்கு சம்பத் அன்பழைப்பு

சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த இந்தி எதிர்ப்பு நாள் கூட்டத்தில்—இலட்சோபலட்சம் மக்கள் மத்தியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், இந்தித் திணிப்பால் நேரவிருக்கும் பேராபத்தை எடுத்துக் கூறி, ஆதிக்கவெறியர்களுக்கு எச்சரிக்கைதந்து, இந்தியை ஒருமுகப்பட்டு எதிர்க்கும் நோக்குடன் இந்நாட்டு அரசியல் கட்சிகள் அனைத்திற்கும் அன்பழைப்பு விடுத்தார்; அதன் விவரம் இங்கு தரப்படுகிறது:—

"வழக்கமாகக் கடற்கரையில் அண்மையில் பல விழாக் கூட்டங்களை நடத்திப்பழக்கப்பட்ட தி. மு. கழகம் இன்றையத் தினம் போர்க்குரல் கொடுப்பதற்கும், தமிழர் பெரும் படையை அணிவகுப்பதற்கும் இங்கு கூடியிருக்கிறது என்று சொன்னல் அது மிகையாகாது.

"நாம் இன்றையத் தினம், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மக்களை தி. மு. கழகத்தின் வாயிலாகச் சந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

"இன்றையத் தினம் தமிழ்நாடு பூராவிலும் தமிழர்களுடைய போர்ப்பரணி கேட்டுக்கொண்டிருக்கும். இது வீண் போகாது.

"இதற்கு முன் ஒவ்வொரு நேரத்திலும் நாம் செய்த ஒவ்வொரு காரியமும் நமக்குப் பலன் தந்திருக்கிறது. ஏராளமான சிரமங்களை நாம் சமாளிக்க வேண்டி நேரிட்டாலும் இறுதியிலே நாம் வெற்றி விழாக்களைக் கொண்டாடித்தானிருக்கிறோம்; ஆகவே, இந்த முறையும் நாம் நம்பிக்கையோடும், உறுதியோடும், இதுவரை இல்லாத அளவுக்கு நல்ல தெளிவோடும், திட மனதோடும் இன்றையத் தினம் இந்தச் செயலிலே நம்மை நாம் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.

"இந்தி விஷயத்தைப்பற்றி இன்றையத் தினம், தமிழ்நாட்டு மக்கள் மத்தியில், பலவிதமான செய்திகள் பல பேர்களினுலே சொல்லப்படுகிறது; ஆனல் ஒன்றை நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்; இந்த இந்திப் பிரச்சினை, வடநாட்டு ஏகாதிபத்தியம் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்கு இந்தியத் துணைக்கண்டத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டிருப்பது? திராவிடர்களை இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்கு அடிமைப் படுத்தி வைத்திருப்பது என்பன போன்ற கேள்விகளுக்குக் கிடைக்க வேண்டிய விடை, இந்தப் பிரச்சினை எப்படி முடிகிறது என்பதிலேதானிருக்கிறது என்று சொன்னல் அது மிகப் பொருத்தமான கூற்றாக இருக்கும்.

"இது ஒரு சாதாரண மொழிப் பிரச்சினையல்ல. பல பேர் இதை எப்படி வர்ணிக்க விரும்புகிறார்கள் என்றால், 'இதிலே அரசியலே தேவையில்லை; இது ஏதோ ஒரு மொழிப் பிரச்சினை; மொழிப் புலவர்களும் பண்டிதர்களும் மொழி ஆராய்ச்சி வல்லுநர்களும் பரிசீலிக்க வேண்டிய விஷயம்; பாமர மக்கள் இதைப்பற்றி கவலை எடுத்துக்கொள்வதும், இதிலே கவனம் செலுத்துவதும் மிகமிகத் தவறு' என்றெல்லாம் சில பக்கத்திலிருந்து குரல்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன; ஆகவேதான், நான் குறிப்பிட விரும்புகிறேன்—'இந்திப் பிரச்சினை வெறும் மொழிப் பிரச்சினையல்ல; அது ஒரு மிகப்பெரிய அரசியல் பிரச்சினை. இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வா, சாவா; இந்த நாட்டு மக்களினுடைய வழித்தோன்றல்களும் இன்றைக்கிருக்கின்றவர்களும் அடிமைகளாகவே வாழப்போகின்றார்களா? விடுதலையை மிக விரைவில் பெறத்தான் போகின்றார்களா?'—என்ற பிரச்சினைகள், இந்தப் பிரச்சினையில் பொதிந்திருக்கின்றன.

"இந்தப் பிரச்சினையில்இன்றையத் தினம், தென்னாட்டிலிருந்துதான் மிகப் பெரிய எதிர்ப்பு கிளம்பிக்கொண்டிருக்கிறது என்பதை வடநாட்டிலிருக்கிற பெருந்தலைவர்கள் சித்தரிக்க முயல்கிறார்கள்.

"நான் நம்முடைய தோழர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்—இதுநாள் வரையிலும் இந்தியை எதிர்க்கின்ற பிரச்சினையில் நாம்-தமிழர்கள் - தனியாட்களாக இருந்தோம்; ஆனல் இன்றையத் தினம் தென்னாட்டிலிருக்கின்ற ஆந்திரத் தோழர்களும், கர்னாடகத் தோழர்களும் — வெகு விரைவிலேயே என்று நம்புகிறேன்—கேரளத் தோழர்களும் இந்தப் பிரச்சினையில் என்றும் காட்டாத ஒற்றுமையைக் காட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

"ஏனென்றால், இந்தி என்பது படிப்பதற்குச் சுலபமாக இருக்குமா இல்லையா என்ற பிரச்சினைதான் இதுநாள் வரை இருந்து வந்தது; ஆனல் இன்றைக்குத்தான் எல்லோரும் உணருகிறார்கள்—1947-ம் ஆண்டுக்குப் பிறகு, 10 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பிறகுதான்—இந்திக்குப் பின்னலே இருக்கின்ற அரசியல் ஆதிக்க வெறியர்களுடைய வேடம் கலைந்திருக்கிறது; இந்திக்குப் பின்னலே பதுங்கிக்கொண்டிருக்கிற—அரசியலிலே இந்தத் துணைக்கண்டத்து மக்கள் அத்தனைப் பேரையும் தங்களுடைய காலடியில் வைத்து நெடுநாட்களுக்கு ஆதிக்கம் புரியவேண்டுமென்ற பேராசைக்குணம் படைத்த—அந்த வெறியர்களுடைய நிலை, இன்றைக்கு அநேகமாக எல்லோருக்கும் வெளிச்சமாகிக்கொண்டு வருகிறது.

"இதுநாள் வரையிலும் வெள்ளையனை ஓட்டவேண்டும்—வெள்ளையனை ஓட்டிவிட்டால் இங்கே நம்முடைய சுதந்தரம் பரிமளிக்கும்—இங்கே நம்முடைய சுதந்தரக் கொடி வானளாவப் பறந்து நம்முடைய பெருமையை உலகுக்கு அறிவிக்கும் என்றெல்லால் கனவு கண்ட உள்ளங்கள்—மிகத் தெளிந்த உள்ளங்கள் என்று உலகத்திலே பெயர் பெற்ற உள்ளங்களெல்லாம்; இன்றையத் தினம் குமுறிக்கொண்டிருக்கின்றன; அது நமக்குத் நன்றாகத் தெரியும்.

"இப்பொழுது எனக்கு முன்பு பேசிய தோழர்கள்கூடக் குறிப்பிட்டார்கள்—தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியில் நம்முடைய மதிப்புக்குரிய ஆச்சாரியார் அவர்கள் மனந்திறந்து பேசிய பேச்சுகளைப் பற்றி; அந்தப் பேச்சு, அவருடைய வழக்கமான இராஜதந்திர சாகசப் பேச்சுக்களின் பாணியில் அமைந்திருக்கவில்லை; அவர் மனம் திறந்து, உள்ளத்திலே எதையும் ஒளித்துவைக்காமல், அங்கே மாணவர்கள் மத்தியிலே பேசியிருக்கிறார்—மிகத் தாராளமாகப் பேசியிருக்கிறார்.

"எப்பொழுதும் உணர்ச்சிகளையே பேச்சிலே காட்டாத அந்தப் பெரியவர், அன்றையத் தினம், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எவ்வளவு உணர்ச்சிவயப்பட்டுப் பேசுவார்களோ அதைப்போல, அவர் பேசியிருக்கிறார்; தமிழ்நாட்டின் சார்பிலே வடநாட்டுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்; 'இந்தியைக் கொண்டுவந்தால் தமிழ் மக்கள் எதிர்ப்பார்கள்' என்று அவர் பேசியிருக்கிறார்.

"தி. மு. கழகத் தோழர்கள் மட்டுமே கூறிவந்த அந்த வாசகம், அவருடைய வாயிலேயிருந்து வருவதற்கு இத்தனை நாட்கள் ஆகியிருக்கின்றன. அவர் மிகத் தாராளத்தோடும், உரிமையோடும் தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்கிறார்—'1937-ல், இந்தி கொண்டு வந்தேன், இந்தி கொண்டு வந்தேன்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே; நான் கொண்டு வந்த நோக்கம் வேறு—தமிழ்நாட்டு மக்கள் அப்பொழுது புரிந்துகொண்ட நோக்கம் வேறு; எது எப்படியிருந்தாலும், ஒரு மனிதன் தவறு என்று நினைத்ததைக்கூட விட்டுவிட இந்த நாட்டில் உரிமையில்லையா?'—என்று அவர் பேசியிருக்கிறார்.

"அவரைவிடத் தாராளமாக—அவரைவிட கண்ணியத்தோடு தி. மு கழகம் இந்தப் பிரச்சினையிலே, அவருடைய சக்தியைப் பயன்படுத்திக்கொள்வதிலே பெருமைகொள்ளுகிறது; பலம்—துணை கிடைத்திருக்கிறது என்று நம்புகிறதே தவிர, உதறித் தள்ளுவதற்கு நிச்சயமாக முன்னேற்றக் கழகம் விரும்பவில்லை.

"அவரை மட்டுமல்ல; தி. மு. கழகம், இன்றைக்குத் தமிழ்நாட்டிலிருக்கின்ற அத்தனை அரசியல் சக்திகளுக்கும், அத்தனை அரசியல் தலைவர்களுக்கும், அத்தனை அரசியல் கட்சிகளுக்கும் இன்றையத்தினம் வேண்டுகோள் விடுக்கின்றது; நமக்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் சபை, சட்டசபை உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை தருக!

அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கை!

புதுடில்லி, அக். 15—

"அரசியல் சட்டப்படி, மக்கள் சபை உறுப்பினர்களுக்குப் பெரும் பொறுப்புகள் இருக்கின்றன; எனவே, அவர்களுக்கு சர்க்கார் அதிகாரிகள் ஒத்துழைப்புத் தரவேண்டுவது மிக அவசியமாகும். மேலும் அந்த மக்களின் பிரதிநிதிகளுக்கு உரிய கௌரவமும் மரியாதையும் தரப்படவேண்டும். பேட்டி காணவரும் வேறு எவரிலும், இந்தப் பிரதிநிதிகளுக்கே முதலிடம் தர வேண்டும். பொது நிகழ்ச்சிகளில் மக்கள்சபை, மற்றும்சட்டசபை உறுப்பினர்களுக்கு தகுந்த இடத்தில் இடம் ஒதுக்கித் தரவேண்டும்."

இவ்வாறெல்லாம், மத்திய சர்க்கார் உள்நாட்டிலாகா, தனது அதிகாரிகள் அத்தனைபேருக்கும் ஒரு சுற்றறிக்கை மூலம் போதனை செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தென்னப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக....

டிச. 10-ல் மனித உரிமைநாள் கொண்டாடுக!

நியூயார்க், அக். 14—

தென்னுப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து, டிசம்பர் 10-ம் நாளை மனித உரிமை நாளாகக் கொண்டாடுமாறு தத்துவஞானி பெட்ரண்ட் ரசல், சரித்திரப் பேராசிரியர் அர்னல்டு தாயன்பி, மற்றும் பலர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்று இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் 38 நாடுகளைச் சேர்ந்த 123 பிரதிநிதிகள் கையொப்பமிட்டிருக்கின்றனர் என்றும், ஆப்பிரிக்காவிற்கான அமெரிக்க சமிட்டியால், ஐ. நா. தலைமைக் காரியாலயத்திலிருந்து அது வெளியிடப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

இந்த நாள் கொண்டாடுவதின் நோக்கம், தென்னுப்பிரிக்க சர்க்காரை, அது, இன ஒதுக்கல் கொள்கையின் எல்லையைத் தொடுமுன், ஜனநாயக சமத்துவத்தில்தான் நிரந்தரமான சமாதானமும் பாதுகாப்பும் இருக்கிறது என்பதை உணரச் செய்வதே என்றும் அறிக்கை கூறுகிறது.

தீர்ப்புகளை அமுல்செய்ய மறுப்போருக்குத் தண்டனை!

மாநில தொழிலாளர் மந்திரிகள் ஒப்புக்கொண்டுவிட்டனராம்!

புதுடில்லி, அக். 15—

தொழில் நீதிமன்றங்களும், இதர அதிகாரப்பீடங்களும் வழங்கும் தீர்ப்புகளை அமுல் செய்யாமலிருப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை தரவேண்டுமென, மாநில தொழிலாளர் மந்திரிகள் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டதாம்!

அத்தகைய தீர்ப்புகளை அமுல் செய்யாமலிருப்பவர்கள், தொடர்ந்து குற்றம் புரிவதாகக் கருதப்பட்டு, தீர்ப்புகளை அமுல் செய்யத் தயங்கும் ஒவ்வொரு நாளுக்கும் அபராதம் விதிக்க வேண்டும் என்றும் மாநாட்டில் பேசப்பட்டதாம்!

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—10—'57 புதன்

அரசியலே காரணம்!

மாவட்ட ஆட்சி மன்றங்களினுல் பயன் விளைவதாக இருந்தாலும் இல்லாமற்போனுலும், அம்மன்றங்களை ஒழித்துக்கட்டி விடுவது என்ற முடிவிற்கு ஏற்கனவே சென்னைக் காங்கிரசு அமைச்சரவை வந்துவிட்டிருக்கின்றது. அம்முடிவை அமைச்சரவை ஒளித்துவைத்துக் கொண்டிருக்கவும் இல்லை. சென்ற ஆண்டில் சென்னை அரசாங்கம் வெளியிட்டிருந்த தலத்தாபன எதிர்காலம் பற்றிய வெள்ளை அறிக்கையில் அவ்வொழிப்புப் பணியினைத் தெளிவுபட குறிப்பிட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சி மன்றங்கள் இனித் தேவையில்லை என்ற முடிவிற்கு சென்னை அரசாங்கம் வந்திருப்பதில், கட்சி அரசியல் இடம் பெற்றிருக்கவில்லை என்று சொல்லிவிட முடியாது. சொந்தக் கட்சியின் எதிர்கால நலத்தை மனதிற் கொண்டுதான் காங்கிரசு ஆளவந்தார்கள், மாவட்ட ஆட்சி மன்றங்களை ஒழித்துக்கட்ட முன்வந்திருக்கிருர்கள் என்ற குற்றச்சாட்டினை, ஆளவந்தார்களால் மறைத்துவிடவும் முடியாது—மறுத்துவிடவும் முடியாது.

ஊராட்சி மன்றங்களுக்கு உள்ள அதிகாரத்தை விரிவாக்குதல் என்று, மாவட்ட ஆட்சி மன்றங்களின் ஒழிப்புக்கு ஆளவந்தார்கள் குறிப்பிட்டுவரும் காரணம் வெறும் பகட்டேயாகும். அதில் ஓரளவுதான் உண்மை இருக்கின்றதே அல்லாது முழு அளவு உண்மை இருக்கவில்லை.

நகரப் பகுதிகளில், வரவர ஆளும் காங்கிரசுக் கட்சியின் செல்வாக்கு மிகவும் விரைவாக சரிந்து வருகின்றது என்ற உண்மையை மற்றவர்களைப் போன்றே ஆளவந்தார்களும் நன்கு தெரிந்துகொண்டு இருக்கின்றுர்கள். அதுபோன்றே, சிற்றூர் பகுதிகளிலும் மெள்ள மெள்ள - ஆனுல் உறுதியாகக் காங்கிரசுக் கட்சியின் செல்வாக்கு கரைந்து வருகின்ற அவல நிலையையும் இந்தப் பொதுத் தேர்தல் மூலம் ஆளவந்தார்கள் அறிந்துகொள்ளலாயினர். இந்த அவல நிலையைத் தடுத்து நிறுத்தாது இப்படியே வளரவிட்டுக்கொண்டு போனுல், தங்களுடைய ஆளும் வாய்ப்புக்கே எதிர்காலத்தில் பேராபத்தாக முடிந்துவிடக்கூடும் என்ற பேருண்மையையும் காங்கிரசு ஆளவந்தார்கள் தெளிவாக உணர்ந்து கொண்டனர். எனவே, எப்படியும், இந்தக் காங்கிரசு சரிவைத் தடுத்தாக வேண்டும் என்ற முடிவிற்கு ஆளவந்தார்கள் வந்துவிட்டனர். அதற்கான முதற்படிதான் மாவட்ட ஆட்சி மன்றங்களின் ஒழிப்பு முயற்சி.

மாவட்ட ஆட்சிமன்றங்களின் செயல்முறையில், தேர்தல் காலங்களில் நீங்கலாக மறுதேர்தல் வருகின்றவரையில், சிற்றூர் மக்களுக்கு எந்தவிதத் தொடர்பும் இருப்பது கிடையாது என்பது ஒப்பமுடிந்த கருத்தாகும். மக்களின் ஆதரவைக் கோரும் தேர்தல்காலம் நீங்கலாக மற்ற காலங்களில், தம் தொகுதியிலுள்ள சிற்றூர்களுக்குச் செல்லுகின்ற வழக்கமோ, அச்சிற்றூர் மக்களின் குறைபாடுகளை முகமலர்ச்சியுடன் கேட்டு, அவைகளைக் களைய முயலுகின்ற நற்பழக்கமோ, தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கு இதுவரை இருந்ததும் கிடையாது எனவே, அப்பிரதிநிதிகள் சொல்லுக்கு மதிப்பளிக்க சிற்றூர் மக்கள் மறுப்பதும், அவர்களை வெறுப்பதும், எதிர்ப்பதும் மிகமிகச் சாதாரண வழக்காகிவிட்டது. அதன் பலனுக, அப்பிரதிநிதிகள்பெரும்பாலும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்துவருவதால், சிற்றூர் மக்கள்பால் அவர்கள் காட்டிவரும் அலட்சியம், காங்கிரசுக் கட்சியைப் பெரிதும தாக்கித் தகர்க்கத் தொடங்கியது.

எனவே, இதைத் தடுத்து நிறுத்தினுல்தான், தமது ஆட்சிக்கு எதிர்காலம் இருக்க முடியும் என்ற முடிவிற்குக் காங்கிரசு ஆளவந்தார்கள் வந்துள்ளனர்.

ஊராட்சி மன்றங்களுக்கு இருந்துவரும் அதிகாரத்தை சொல்லளவில் விரிவாக்குவதின் மூலமாக, சிற்றூர் மக்களிடம் நாள்தோறும் நெருங்கிப் பழகி வருகின்றவர்களைக் காங்கிரசுக் காவலர்களாக ஆக்கிவிட முடியும் என்றும், அவர்களைக் கொண்டு காங்கிரசுக் கட்சியை விரைந்து நெருங்கிவரும் பயங்கர வீழ்ச்சியை மேலும் சில ஆண்டுக் காலத்துக்குத் தடுத்து நிறுத்திவைக்கமுடியும் என்றும், காங்கிரசு ஆளவந்தார்கள் முடிவுகட்டியுள்ளனர். அந்நம்பிக்கைப்படி செயல்படவும் முனைந்துள்ளனர்.

இதுபற்றி, அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் சட்டமியற்றும் முயற்சியில் காங்கிரசு அமைச்சரவை ஈடுபட இருக்கிறது. அந்தச் சட்டத்தில் மாவட்ட ஆட்சிமன்ற ஒழிப்பு வெற்றிகரமாக முடிந்துவிடும்.

விலைவாசிகளின் புள்ளி குறைந்துவிட்டதாம்!

மத்திய உணவு மந்திரி கணக்கு தருகிருர்!

ஸ்ரீநகர், அக். 14—

1960—61-க்குள் இந்தியா உணவு விஷயத்தில் தன்னுடைய தேவையை வெளிநாட்டு உதவியின்றி பூர்த்திசெய்துகொள்ளும் நிலையை அடைந்துவிடுமாம்.

இந்தியா 1960—61-க்குள் 18·5 இலட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி செய்யும் திட்டத்தை நிறைவேற்றிவருகிறதாம்!

இப்போது விலைவாசிகள் 1952—53-ல் இருந்ததைவிட மிகக் குறைவாம். 106-விருந்து 102-ஆக விலைவாசிகள் புள்ளி குறைந்துள்ளதாம்.

மத்திய உணவு அமைச்சர் செயின் இதனைத் தெரிவித்துள்ளார்.

11-கோடி பேர் பேசுவதனுலேயே இந்தியை மற்றவர்கள்மீது திணிப்பதா?

ஆங்கிலத்தை வெள்ளையர்கள் நம்மீது வற்புறுத்தியா சுமத்தினுர்கள்?

விரும்பாத ஒன்றைக் கட்டாயப்படுத்துவதா நேர்மை?

சேலம் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் எழுப்பிய வினு

சேலம், அக். 15—

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கைக்கிணங்க, சேலம் நகரில் 13—10—57 மாலை சைக்கிள் ஊர்வலம் நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. கழகப் பணிமனை முன்பு உள்ள சாலையின் ஓரங்களிலெல்லாம் சைக்கிள்கள் நிறைந்துவிட்டன. மாலை 4 மணிக்குமேல் சுமார் 3,500-க்கு மேற்பட்ட சைக்கிள்கள் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்றன.

'இந்தியைப் புகுத்தாதே', 'வடநாட்டு ஆதிக்கம் ஒழிக' என்று ஊர்வலத்தினர் முழங்கிக்கொண்டு சென்றனர்.

சேலத்தில் தேர்தலின்போது தி. மு. கழகம் ஒரு மாபெரும் சைக்கிள் ஊர்வலத்தை நடத்தியது; அதற்குப் பின்பு இப்பொழுதுதான் அத்தகைய மாபெரும் சைக்கிள் ஊர்வலத்தை தி. மு. கழகம் நடத்தியது.

ஊர்வலம் சென்ற திக்குகளிலெல்லாம் சாலையின் இரு ஓரங்களிலும் மக்கள் திரண்டு நின்று நிகழ்ச்சியைக் கண்ணுற்றனர். சிறுவர்களும், பல வயது முதியவர்களும் சைக்கிள் ஊர்வலத்தில் சென்றது குறிப்பிடத்தக்கது.

தி. மு. கழகக் கொடிகளையும், 'இந்தியைப் புகுத்தாதே' என்று எழுதியுள்ள அட்டைகளையும் தாங்கி கழகத் தோழர்கள் சைக்கிள் ஊர்வலத்தில் சென்றனர்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணு ஆகியவர்களின் உருவப் படங்களை அலங்கரித்து சைக்கிள்களில் வைத்துக்கொண்டு சில தோழர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

நகரின் பல முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் சென்று பின் போஸ் மைதானத்தை அடைந்தது.

பொதுக்கூட்டம்

போஸ் மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் எஸ். மெய்யப்பன் தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். சுமார் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தீர்மானங்களை முன்மொழிந்து சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் பேசினுர். தோழர் நடராசன் வழிமொழிந்தார்.

பலத்த கைதட்டுதலுக்கிடையே இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேறின; அவ்வமயம் 'இந்தி ஒழிக' என்று கூட்டத்தில் இருந்த அனைவரும் பலத்த குரலில் முழக்கமிட்டனர்.

கூட்டத்தில் இரண்டு குழந்தைகளுக்கு 'பாண்டியன்' 'இளங்கோவன்' என்ற பெயர்களை தோழர் நெடுஞ்செழியன் சூட்டினுர்.

பின்னர், பலத்த கைதட்டுதலுக்கிடையே பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் பேச எழுந்தார்; பல கிளைக்கழகங்கள் சார்பிலும், தொழிலாளர் சார்பிலும் பொதுச்செயலாருக்கு மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலுக்குப்பின் 7 திங்கள் கழித்து மீண்டும் உங்களிடையே பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சி எய்துகிறேன். தேர்தலுக்குமுன் தி. மு. கழகத்தைப் பற்றிப் பலர் தப்புக்கணக்குப் போட ஆரம்பித்தார்கள். தேர்தலோடு தி. மு. க. ஒழிந்துவிடும் என்று பலரும் எண்ணினுர்கள்; 'தி. மு. கழகத்தை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்' எனத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் இராசாராம் நாயுடு பேசி இருக்கிருர்; அவர் கோபமும் அதிர்ச்சியும் அடையும் அளவிற்கு தி. மு. கழகம் வளர்ந்திருக்கிறது.

"வளர்ந்துவிட்ட தி. மு. கழகத்தைப் பற்றிப்புரிந்துகொள்ளாமல்—இப்பொழுதுதான் புதியதாக ஆரம்பித்திருக்கிற கட்சி என்று எண்ணி—அதை முளையிலே கிள்ளி எறியவேண்டுமெனத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பேசி இருக்கிருர். 1949-ம் ஆண்டு செப்டம்பர் 17-ல் தி. மு. கழகம் துவங்கப்பட்டது; 8 ஆண்டுகள் பூர்த்தியாகி 9-வது ஆண்டு நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. 9 ஆண்டுகள் வளர்ந்துவிட்ட தி. மு. கழகத்தைப் பார்த்து, 'முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்' என்று கூறும் அர்த்தமற்ற அவருடைய பேச்சைக் கண்டு நாம் என்ன நினைப்பது? என்ன பேசுகிறோம் என்று தெரியாமலேயே அவர்கள் பேசுகிருர்கள்!

"'தேர்தலில் தி. மு. கழகத்தினர் 15 பேர்கள்தானே வெற்றி பெற்றுர்கள்; இவர்கள் என்ன சாதிக்கப்போகிருர்கள்?' என்று பலர் கூறினுர்கள். ஜனநாயக முறையில் சிறு கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் அது எவ்வாறு பணியாற்றுமோ அதேபோல் தி. மு. கழகம் பணியாற்றிவருகிறது.

"சென்ற 7 திங்களில் சட்டசபையில் தி. மு. கழகம் என்ன சாதித்தது எனபது உங்கள் அனைவருக்கும் தெரியும். எங்கள் சாதனைகளை நாங்கள் சொல்வதைவிட எதிர்க்கட்சிகள் சொல்வதை நீங்கள் நம்பலாம்.

"வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழிக்க தி. மு. கழகம் பாடுபடுகிறது. இந்தியா முழுவதும் ஒற்றுமையாய் இருக்க ஒரே தேசிய மொழி தேவை என்றும், தேசிய மொழியாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியால் நாடு ஒற்றுமைப்படும் என்றும் காங்கிரஸ்காரர்கள் கூறுகிருர்கள். காங்கிரஸ்காரர்கள் எண்ணுவதுமாதிரி இந்தி மொழியால் நாடு ஒற்றுமைப்படவில்லை; நாட்டின் பல பகுதிகளிலும் இந்தியைஎதிர்க்கிருர்கள். ஒற்றுமைக்குப் பதிலாக இந்தி மொழியால் பிளவுகளும், வேற்றுமைகளும் தான் அதிகரிக்கின்றன; மொழிப் பிரச்சினையால்தான் பாகிஸ்தான் நாடு தனியாகப் பிரிந்தது.

"இந்தி மொழியால்தான் திராவிடநாடு உணர்ச்சியே ஏற்பட்டது. 1937-ல் ஆச்சாரியார் இந்தியைக் கொண்டுவந்தார்; எல்லோரும் சேர்ந்து எதிர்த்ததன் காரணமாக இந்தி விரட்டப்பட்டது. 1938-ல் தமிழ்நாடு பிரிவினை உணர்ச்சி ஏற்பட்டது; 1937-ல் ஆச்சாரியார் இந்தி கொண்டுவந்தபோது அதை எதிர்த்து ஆயிரம் பேருக்குமேல் சிறை சென்றுர்கள்; இந்தி விரட்டப்பட்டது. 1940-ல் திருவாரூரில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில் தெலுங்கர்கள், மலையாளத்தார், கன்னடர்கள், தமிழர்கள் ஆகியவர்கள் ஒப்புதலின்பேரில் தமிழ்நாட்டுப் பிரிவினைக்குப் பதில் திராவிட நாட்டுப்பிரிவினை வேண்டும் என்ற குரல் எழுப்பப்பட்டது. திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டும் என்ற தீர்மானம் திருவாரூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. திராவிட நாடு

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-தெற்கில் உள்ள நிலை

தாழ்த்தப்பட்டோர் நிலை பற்றி மத்திய அமைச்சர் செகசீவன்ராம்

சென்னை, அக். 15—

"நாட்டின் சுதந்தரத்திற்காக நடைபெற்ற போராட்டத்தைவிட மனித உரிமைகளுக்காக நடத்தப்படும் போராட்டம் மிக்க சிக்கலானது; கடுமையானது"

என்று, மத்திய இரயில்வே அமைச்சர் செகசிவன்ராம், தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் மாணவர் இயக்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், 'இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற சாதிச் சண்டைக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரப் பிரச்சினையேயாகும்' என்று தெரிவித்துள்ளார்.

"இத்தகைய சம்பவங்கள் நாட்டின் மற்றப் பகுதிகளில்—குறிப்பாக பீகார் மாநிலத்தில்கூட நடைபெறுகிறது; அதற்காக நான் வருந்தவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளை வற்புறுத்துகின்றனர் என்றே இதிலிருந்து நான் கருதுகிறேன். பொருளாதாரத் துறையில் பின் தங்கியவர்கள், உரிமைகளைக் கேட்கும்போது சிக்கல் ஏற்படத்தான் செய்யும்.

"சுயமரியாதையைப் பாதுகாக்கப் புரிந்திடும் தியாகம் பெரிதல்ல! 500 பேர் இறந்தால் கூட வருந்தவேண்டியதில்லை. தக்க சமயத்தில் இத்தகைய தியாகம் செய்யாவிட்டால் எந்தக் காலத்திலும் முன்னேற்றத்திற்கு வாய்ப்பு கிடைக்காது" என்றும் அவர் தெரிவித்தார்.

சமுதாயத்துறைபற்றி அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தாழ்த்தப்பட்டவர்களில் ஒரு சிலர் பார்ப்பன பெண்களைத் திருமணம் செய்துக் கொள்வதாலேயே நிலைமை சீர்திருந்திவிடாது. தீண்டாமை தென்னுட்டில் தலைவிரித்தாடுகிறது என்று கூறுகிருர்கள்; ஆனுல், நான் காண்பது வேறு; தென்னுட்டில் கோயில்களில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது. இன்றும் வடநாட்டில் பல கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிப்பதில்லை.

"வடநாட்டில் சேரிகள், சாதி இந்துக்கள் வாழும் பகுதியுடன் தொடராக உள்ளன. தென்னுட்டில் சேரிகள், ஒரு சில கெசங்களுக்கு அப்பால் உள்ளன"

'ஆட்சி மொழியாக இருக்க இந்திக்கு அருகதையில்லை'

'ஆங்கிலமே இந்தியப் பொதுமொழியாகத் தொடர்ந்து இருக்கவேண்டும்'

அ. இ. முஸ்லிம் லீக் தலைவர் கருத்துரை

சேலம், அக். 15—

12—10—57 மாலை, போஸ் மைதானத்தில், முஸ்லிம் லீக் சார்பில், சேலம் நகர முஸ்லிம் லீக் தலைவர் எச். முகமத் ஆசா சாகிப் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அ. இ. முஸ்லிம் லீக் தலைவரும், மத்திய மேல் சபை உறுப்பினருமான எம். முகமத் இஸ்மாயில் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் முஸ்லிம் லீக் சார்பாக அப்பொழுதே சொன்னேன்; என் வார்த்தையைக் கேட்கவில்லை.

"ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள 150 ஆண்டுகள் ஆயின; இந்தியைக் கற்றுக் கொள்ள எவ்வளவு காலமாகும்? இந்தியைத் ஆட்சி மொழியாக்க முடிவு செய்துள்ளார்கள்; தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கத் திட்டமிட்டுள்ளார்கள்; இந்தியைப் புகுத்த ஏன் இவ்வளவு அவசரப்படுகிறார்கள் என்று புரியவில்லை?

"ஆங்கிலம்போல் ஒரு சிறந்த மொழி அல்ல இந்தி; ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கலாம். சென்னையைப் பொறுத்தவரையில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கலாம். வெளி மாநில விவகாரங்களுக்கு ஆங்கிலத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

"ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டுச் சென்றுவிட்டதால் ஆங்கிலத்தை நாம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்களா? ஆங்கிலத்தையே தொடர்ந்து வைத்துக்கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

"முஸ்லிம் லீக் வகுப்புவாத ஸ்தாபனம் என்று கூறி தேசிய முஸ்லிம் சங்கத்தை காங்கிரசார் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு சாதியிலும் அந்த சாதியின் நலனைக் கவனிக்க சாதியின் பெயரால் சங்கங்கள் இல்லையா? முஸ்லிம் லீக் வகுப்புவாத ஸ்தாபனம் என்றால் சாதியின் பெயரால் உள்ள மற்ற சங்கங்களும் வகுப்புவாத ஸ்தாபனங்களாகாவா?

"முஸ்லிம்களின் நலனைக் கவனிக்கவே முஸ்லிம் லீக் இருக்கிறது. முஸ்லிம்களின் நலனை மட்டுமின்றி மற்ற மக்களின் நலனையும் முஸ்லிம் லீக் கவனித்துதான் வருகிறது. முஸ்லிம் லீக்கை ஒருபோதும் காங்கிரஸ்காரர்களால் அழிக்கமுடியாது."

சென்னை 'மணி விளக்கு' ஆசிரியர் அப்துல் சமத் சாகிப், சேலம் நகராண்மைக் கழக அங்கத்தினர் டி. அப்துல் பாஷீத், மற்றும் பலரும் பேசினர். (உ-இ.)

பாகிஸ்தானின் ஐந்து பிரதமர்கள் !

கராச்சி, அக். 14—

பாகிஸ்தான் சுதந்தரம் பெற்ற பின்னர் 5 பிரதமர்கள் நாட்டை ஆண்டுவந்துள்ளனர்.

லியாகத் அலிகான் : 14-8-47 முதல் 16-9-51 வரை பிரதமர்; அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குவாஜா நஜிமுதீன்: 17—9—51 முதல் 17—4—53 வரை பதவியிலிருந்தார்; பின்னர் விலக்கப்பட்டார்.

முகமது அலி : 17—4—53 முதல் 10—9—55 வரை பதவியிலிருந்தார்; பின்னர் விலகிக் கொண்டார்.

சௌத்ரி முகமது அலி: 10-8-55 முதல் 11—9—56 வரை பதவியிலிருந்தார்; பின்னர் விலகிக் கொண்டார்.

சுராவர்த்தி : 13—9—56 முதல் 11—10—57 வரை பதவியிலிருந்தார்; பின்னர் விலகிக் கொண்டார்.

விரும்பியவண்ணம் குழந்தை பெறத் திட்டம்

லண்டன், அக். 14—

பெண்கள் தங்கள் விருப்பத்திற்குரிய ஆண்களைப் போன்ற குழந்தைகளை செயற்கை முறையில் பெற ஒரு அமெரிக்கர் திட்டம் தயாரித்து, அதற்கான முறையையும் வகுத்துள்ளார்.

புகழ்பெற்றவர்கள், விளையாட்டு நிபுணர்கள், பல துறை அழகர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நடிகர்கள், மேதைகள் ஆகியோர், இந்தத் திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட இருக்கும் நிலையத்திற்கு விந்து தானம் செய்ய வேண்டுமாம்!

இந்தப் புதுமைத் திட்டத்தை அமெரிக்கா, பிரிட்டிஷ் டாக்டர்கள், விஞ்ஞானிகள் ஆராய்வர் என்று தெரிய வருகிறது.

சர்க்கார் தீவிர பஸ் தொழிலாளர் சங்கச் சிறப்புக் கூட்டம்

க. அன்பழகன், என். சீவரத்தினம், பாண்டியன் கலந்துகொண்டனர்

சென்னை, அக். 15—

சென்னை சர்க்கார் தீவிர பஸ் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 10—10—57 மாலை 6-30 மணியளவில், சென்னை மெமோரியல் மண்டபத்தில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. பஸ் தொழிலாளர்களும், பொதுமக்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர்.

சங்கத்தின் தலைவரான தோழர் கி. மனோகரன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப்பின் தோழர்கள் எல். இராமச்சந்திரன், டிரைவர் கண்ணப்பா, ஆர். எஸ். பாண்டியன், என். சீவரத்தினம் ஆகியோர் சங்கத்தின் செயல்முறைகள் பற்றியும், பஸ் நிர்வாகத்தில் சர்க்கார் நடந்துகொள்ளும் விதத்தைக் கண்டித்தும் விரிவாகப் பேசினர்.

இறுதியாகத் தோழர் க. அன்பழகன் அவர்கள், இத்தகைய தொழிலாளர் சங்கங்கள் இருக்க வேண்டிய அவசியங்குறித்தும், தி. மு. கழகம், எந்தெந்த வகையில் இச்சங்கத்துக்கு உதவ முடியும் என்பதையும், தொழிலாளரின் கடமை குறித்தும் விளக்கி விரிவுரையாற்றினர்.

கூட்டத்தில், தலைவர் மனோகரன் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு :—

சென்ற 15 நாட்களாக, டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்யும் தோழர்களை அநேக 'ரூட்'களில் வேலைக்கு அனுப்பும் முறையின் விளைவாக—தொழிலாளர்களின் வீடுகளுக்கும் 'ரூட்'களுக்கும் வெகு தொலைவு இருப்பதால்—அவர்கள் சாப்பாட்டிற்கு வசதியின்றி அவதிப்படுகின்றனர். இம்முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று டிரான்ஸ்போர்ட் உதவி டைரெக்டரைக் கேட்டுக் கொள்வதுடன், முன்பிருந்த டிரான்ஸ்போர்ட் கமிஷனர் கையாண்டுவந்த முறையும் வழிகளும் ஒத்ததாக இல்லை என்பதை இக்கூட்டம் எடுத்துக்காட்டுகிறது.

டென்னிஸ் செக்ஷனில் வேலை செய்யும் தோழர்களில் ஒரு குழுவினர் இரவிலும், மற்றொரு குழுவினர் பகலிலும் மாறிமாறி ஒரு மாதத்துக்கு வேலை செய்யும் முறை அமுலில் இல்லாததால், அம்முறையைக் கையாளும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

'ரூட்'டில் வண்டிகளைக் குறைவாக விடுவதாலும், மக்கள் அதிகமாக வந்து ஏறுவதாலும், கண்டக்டருக்கு டிக்கெட் கொடுப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதுடன், வண்டிக்கும் நஷ்டமேற்படுகிறது; இதைத் தடுக்க அதிக வண்டிகள் விடவேண்டும்.

மற்றும் இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

15 கோடி பவுண்டு வட இந்தியத் தேயிலை

வெளி நாட்டிற்கு ஏற்றுமதியாகும்

இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் 15 கோடி பவுண்டு வட இந்தியத் தேயிலையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்று டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

நோபல் சமாதானப் பரிசு

ஒஸ்லோ, அக். 14—

கனடாவின் முன்னாள் வெளி விவகார இலாகா மந்திரி லெஸ்டர் பியர்சனுக்கு 1957-ம் ஆண்டிற்கான நோபல் சமாதானப் பரிசு அளிக்கப்பட்டிருப்பதாக நார்வே பார்லிமெண்டின் நோபல் கமிட்டி அறிவித்துள்ளது.

பியர்சன் 1952-ம் ஆண்டு ஐ. நா. பொதுச் சபையின் ஏழாவது கூட்டத்திற்குத் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

அத்துடன், 'நேட்டோ' என்ற வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் கர்த்தாக்களில் பிரதானமானவருங்கூட!

இந்த ஆண்டு நோபல் பரிசு சுமார் 14,300 பவுன் மதிப்புடையதாகும்.

கிராண்ட் லைன் வ. உ. சி. மன்ற ஆண்டுவிழா

சி. பி. சிற்றரசு, டி. சண்முகம், ஆர். எஸ். பாண்டியன் கலந்துகொண்டனர்

11—10—57 மாலை 6 மணிக்கு செங்குன்றம் அடுத்த கிராண்ட் லைன் என்ற சிற்றூரில், வ. உ. சி. மன்றத்தின் 5-ம் ஆண்டு விழா தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

விழாவில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களும், தோழர் ஆர். எஸ். பாண்டியன் அவர்களும் கலந்துகொண்டு, தென்னாட்டின்மீது வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் அரசியல்-பொருளாதார-மொழித் துறைகளில் ஆதிக்கம் செலுத்துவதை விளக்கியும், சிற்றூர் மக்கள் சமுதாய விழிப்புணர்ச்சி பெறவேண்டிய தன் அவசியத்தையும் விளக்கி நீண்டதோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், இந்திமொழி ஆதிக்கத்தைக் கண்டித்தும், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டம் துவங்கும் போது இம்மன்றமும் ஈடுபடத் தயாராக இருக்கிறதென்று உறுதியளித்தும், சென்னையைத் தமிழ் நாடு என மாற்றுவதற்குக் கண்டித்தும், உடனடியாக மாற்றக் கோரியும், தீர்மானங்கள் தோழர் என். தனபாலன் அவர்களால் படிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. மன்றச்செயலாளர் ஆர். சங்கரன் ஆண்டறிக்கை வாசித்தார். கூட்டத் தலைவருக்கும், சொற்பொழிவாளர்களுக்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. விழாவில் அண்ணா அவர்களின் இந்தி எதிர்ப்பு மாநாட்டுச் சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் செ. முனுசாமி நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

விழாவில் சி. பி. சிற்றரசு அவர்களால், அழிஞ்சிவாக்கம் தோழர் கணேசன் அவர்களின் ஆண்குழந்தைக்கு 'செங்குட்டுவன்' என்றும், வடகரை கே. இராமலிங்கம் அவர்களின் பெண் மகவுக்கு 'மணிமேகலை' என்றும், தோழர் இரத்தினம் அவர்களின் ஆண் மகவுக்கு 'இளங்கோவன்' என்றும், தோழர் லோகநாதன் அவர்களின் பெண் மகவுக்கு 'சத்தியவாணி' என்றும் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ஒவ்வொரு தோழரும் 'நம் நாடு' வளர்ச்சிக்கென ரூ. 1-வீதம் மொத்தம் ரூ. 4 அன்பளிப்பாகக் கொடுத்தார்கள்.

****

'ஹோம்லண்ட்'

(HOMELAND)

★

Homeland — சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடாகிவிட்டது; அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; துவக்க வேலைகள் முடிந்து கொண்டு வருகின்றன.

Homeland—'நம் நாடு' அலுவலகத்திலிருந்து இனி வெளிவரும்.

Homeland இதழ் சம்பந்தப்பட்ட கடிதங்கள், மணியார்டர்கள், இன்ஷுயூர்கள், செக்குகள் முதலியன இனி,

சி. என். அண்ணாதுரை,
Homeland அலுவலகம்
'அறிவகம்'—இராயபுரம்
சென்னை-13.

என்ற முகவரிக்கு அனுப்பக் கோருகிறேன்.

'திராவிட நாடு' சம்பந்த மானவைகளை, வழக்கம்போல் காஞ்சிபுரம் முகவரிக்கு அனுப்பவும்.

Homeland — சென்னையிலிருந்து அக்டோபர் 27-ல் வெளிவரும்.

வாசகர்களும், ஏஜெண்டுகளும், இந்தத் தாமதம் பொறுத்திட வேண்டுகிறேன்.

அன்பன்
அண்ணாதுரை

****

போலீசார் மனைவியருக்கு கைத்தொழில் பயிற்சி

ஊதியமும் தரப்படுமாம்

சென்னை, அக். 12—

போலீஸ்காரர்களின் மனைவியரும் தங்கள் குடும்ப வருவாயை அதிகரித்துக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

30 பேருக்கு தையல், பூவேலை ஆகியவைகளிலும், 20 பேருக்கு பாய்முடைதலிலும் பயிற்சிதரப்படும்.

இதற்குத் துவக்கச் செலவு ரூ. 4,300 ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தையல் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 15 ஊதியமும், மற்றத் தொழில்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 10 ஊதியமும் தரப்படுமாம்.

அன்பளிப்புகள்

★

பிறப்பு—பெயர் சூட்டல்

சென்னை, கன்னியப்ப நகரைச் சேர்ந்த தோழர் மாணிக்கம் அவர்களின் ஆண் மகவுக்கு 'செங்குட்டுவன்' என்றும், பெண் மகவுக்கு 'கண்மணி' என்றும் பொதுச் செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களால் 18—9—57 அன்று பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

பம்பாய், நேப்பியன் கடற்கரை வீதி தோழர் அன்பரசு-தோழியர் செல்வகிரோன்மணி ஆகியோரின் பெண் மகவுக்கு 12—9—57-ல் 'அன்புமதி' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

புதுக்கோட்டையை அடுத்த அன்னவாசல் தோழர் பெ. தம்பிதுரை துணைவியார் தோழியர் புவனேசுவரி அம்மையாருக்கு 18—9—57-ல் ஓர் ஆண் மகவு பிறந்ததன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

கேரள மாநிலத்தைச் சேர்ந்த பலராமபுரம் தி. மு. க. தோழர் சி. ம. நடராசன் அவர்களின் ஆண் மகவுக்கு பலராமபுரம் தி. மு. க. செயலாளர் தோழர் அ. சுப்பிரமணியன் அவர்களால் 'மதியழகன்' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

குடந்தை வியாபாரச் செட்டித் தெருவைச் சேர்ந்த தோழர் அரங்கன் அவர்களின் துணைவியார் தோழியர் அஞ்சம்மாளுக்கு 9—8—57-ல் பிறந்த ஆண் குழந்தைக்கு 23-8-57-ல் 'செங்குட்டுவன்' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

15—9—57-ல் மணலரில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களால் தோழர் பா. ஜேக்கப் அவர்களின் ஆண் குழந்தைக்கு 'செங்குட்டுவன்' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3—8—0 அளிக்கப்பட்டது.

* * *

கோபிசெட்டிப் பாளையம் தோழர் கா. பெ. துரை—இரா. மணி இவர்களின் ஆண் மகவுக்கு பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., அவர்களால் 'செங்குட்டுவன்' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

திமிரி தி. மு. க. செயலாளர் தோழர் இரா. அரங்கநாதன் அவர்களின் துணைவியார் தோழியர் இலக்குமி அம்மையார் 22-9-57-ல் ஓர் ஆண்மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

கணியூரையடுத்த வஞ்சிபுரம் தோழர் எம். இராமசாமி அவர்களின் ஆண்மகவுக்கு செல்வத் தினம் எனப் பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த கரையாம்புதூர் தோழர் கே. எஸ். காளியண்ணன் அவர்கள் துணைவியார் பவளாயம்மாள் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; 22—9—57-ல் அக்குழந்தைக்கு செல்லம்பட்டி தி. மு. க. செயலாளர் தோழர் க. இளங்கோ அவர்களால் 'அண்ணாதுரை' எனப் பெயர் சூட்டப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

ஈ. வெ. கி. சம்பத் அன்பழைப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குள்ளே இருக்கின்ற பேதாபேதங்களை' — நமக்குள்ளே இருக்கின்ற கருத்து வேற்றுமைகளை — நமக்குள்ளே இருக்கின்ற போட்டாபோட்டி மனோபாவங்களை நாம் கொஞ்ச நாளைக்கு மறப்போம்; கொஞ்ச நாளைக்கு ஒத்திவைப்போம்; இந்திப் பிரச்சினையில் தமிழர்களுடைய சக்தி ஒன்று திரளட்டும். ஒருமுகப்பட்ட சக்தியோடு நாம் இந்த ஆதிக்க வெறியர்களை எதிர்க்கத்தான் வேண்டும். இதிலே பழைய வரலாறுகளைக் கிண்டிக்கொண்டு, இருக்கின்ற கொஞ்ச பலத்தையும் பாழடித்துக்கொள்ளத் தேவையில்லை— என்று, அரசியல் கட்சிகளிலேயே மிகக் குறைந்த வரலாற்றையுடைய திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டிலே இருக்கிற எல்லாக் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கின்றது.

"நம்முடைய பிரச்சினைகள் இருக்கவே இருக்கின்றன. நம்முடைய நாட்டிற்கு வந்துற்றிருக்கின்ற பேராபத்து, நாம் ஒன்றுபட்டுத் தீரவேண்டுமென்கிற உணர்ச்சியை நம்முடைய உள்ளத்திலே உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. இதனாலே யாருடைய நிலையும் மாறிப்போய் விடாது. இதனாலே யாரும் ஏமாந்து போய்விடமாட்டார்கள். இந்தக் கூட்டணியோ, முன்னணியோ—இதற்கு வேறு எந்தப் பெயர் இருந்தாலும்—வேறு எந்தப் பெயர் கொண்டு எவர் அழைத்தாலும் இது ஒன்றும் தேர்தலுக்காகவோ, வேறு ஏதோ உள்நாட்டிலிருக்கின்ற சில்லறைப் பிரச்சினைகளுக்காகவோ சேருகின்ற அணிகளல்ல, ஒருவரையொருவர் ஆழம் பார்ப்பதற்கு!

"இது ஒரு மகத்தான தேசியப் பிரச்சினை; தென்னாட்டு மக்களுடைய உரிமைப் பிரச்சினை; தென்னாட்டு மக்களின் எதிர்கால சந்ததிகளினுடைய வாழ்வைப் பாதிக்கக் கூடிய ஒரு பயங்கரமான பிரச்சினை; இந்தப் பிரச்சினையின் நேரத்தில் போலிக் கவுரவமும், வரட்டு வாதமும் அவரவர்கள் மேற்கொண்டிருக்கின்ற நிலைகளுக்கேற்ப இந்தப் பிரச்சினையிலே முகம் கோணிக்கொண்டு இருப்பதும், வக்கணை பேசிக்கொண்டு இருப்பதும் நாட்டுக்கு நாம் செய்கின்ற மகத்தான துரோகம் என்ற முறையிலே, முன்னேற்றக் கழகம் அத்தனைப் பெரியவர்களையும், அத்தனைத் தலைவர்களையும் நாட்டிலே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளையும், நோக்கி இன்றையத்தினம் மிக வினயத்தோடு வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கிறது.

"இந்தப் பிரச்சினை, இந்தப் பிரச்சினையைப் பேசுவதனாலே வளர்ச்சியடைவதற்கான பிரச்சினையல்ல; நாடு வாழ்வதா சாவதா; நாட்டை, பிற நாட்டிலே இருக்கின்ற மக்கள் மதிக்கக் கூடியவகையிலே உயர்த்துவதா, அல்லது நெடு நாட்களுக்கு இங்கு எழவே முடியாத அளவுக்கு வீழ்ந்து போவதா என்ற பிரச்சினை இது என்பதை எல்லோரும் உணர்ந்து தீரவேண்டும்.

"இன்றையத்தினம் நம்முடைய தோழர்கள் நாடுமுழுவதிலும் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நாட்டு மக்கள் மத்தியிலே வந்திருக்கின்ற பேராபத்தின் தன்மையை விளக்குவதற்காகச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

"இந்தப் பிரச்சினையினுடைய பயங்கரம், இன்னும் இந்த நாட்டிலே இருக்கின்ற பலபேருக்குத் தெரியவில்லை. ஒரு வேடிக்கை, என்னவென்றால், இந்தப் பிரச்சினையினுடைய பயங்கரத்தை நாட்டிலேயே இருக்கின்ற சின்னஞ்சிறு கட்சி—சின்னஞ்சிறு கட்சி என்றால் அளவிலே அல்ல—வயதிலே சின்னஞ்சிறு கட்சி—திராவிட முன்னேற்றக் கழகம் பெரியவர்களுக்கு வேண்டுகோள் விடுகிறது.

"அதேபோல், டில்லியிலே நான் இருந்துகொண்டு பார்த்துச் சுவைத்தேன் — பெருமிதமடைந்தேன்—இந்திப் பிரச்சினையைப் பற்றி டில்லியிலே விவாதம் நடந்து முடிவடைந்த 1 வாரத்துக்குள், நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளிலே இருக்கின்ற மாணவர்கள்—எவரும் சொல்லாமல் அவர்களாகவே—வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்; இந்தியை எதிர்த்துப் பள்ளிக்குப் போகாமல் நின்றிருக்கிறார்கள்.

"இது மிகச் சாதாரணப் பிரச்சினையாக இருக்கலாம்; ஆனால் யார் இந்தப் பேராபத்தை உணர்ந்திருக்கிறார்கள்? எவ்வளவு சுவையான முறையிலே நாம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது?

"சாதாரணமாகக் கதைகளிலே படிப்போம்—அணை உடைந்திருக்கிறது என்ற செய்தியை, தூங்கிக்கொண்டிருந்த ஊர் மக்களுக்கு, பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் வந்து சொல்லி எழுப்பினான்; ஊர் காப்பாற்றப்பட்டது—என்ற கதைகளைப் படித்திருப்போம்; அதைப்போல் இன்றைக்கு நாட்டுக்கு வந்திருக்கின்ற இந்தப் பேராபத்தினுடைய பயங்கரத்தை முதல் முதலிலே நம்முடைய மாணவப் பட்டாளம் உணர்ந்திருக்கிறது. அதற்குப் பிறகு, இன்றையத் தினம் இந்த நாட்டிலே இருக்கின்ற மற்றவர்களாலே கூறப்படுகின்றது."

(பேச்சு முடியவில்லை)

சர்க்காரின் தொழிற்கொள்கை

கடுமையாக அமுல்செய்ய வேண்டியதுதானும்!

புதுடில்லி, அக். 15—

"சட்டங்கள், விதிமுறைகள் பிரகடனங்கள் மூலமாக வகுக்கப்பட்டுள்ள தொழிலாளர் பற்றிய சர்க்காரின் கொள்கையை சகல தரப்பினரும் கடைப்பிடிக்கும்வண்ணம் கடுமையாக அமுல் செய்யவேண்டும்" என, மத்திய தொழிலாளர் மந்திரி குல்ஜாரிலால் நந்தா வற்புறுத்தினாராம்!

மாநிலத் தொழிலாளர் மந்திரிகள் மாநாட்டில் பேசிய அவர், 'இந்தவகையில் தவறுதலோ, தாமதமோ ஏற்படுமானால் சர்க்கார், அந்தக் கொள்கையைக் கடுமையாக அமுல் செய்யவேண்டும்' என்றும் குறிப்பிட்டாராம்!

சி. ஐ. டி. அலுவலகத்தில் கடிகாரம் திருட்டு!

பம்பாய், அக். 15—

குற்றந் துப்பறியும் இலாகா அலுவலகத்திலேயே யாரோ சிலர் தங்களின் கைவரிசையைக் காட்டிவிட்டனராம்!

அலுவலகச் சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய கடிகாரத்தைக் காணவில்லையாம்—யாரோ திருடிச்சென்றுவிட்டனராம்!

திருட்டு பற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் அந்தத் திருட்டைக் கண்டுபிடிக்க, கடிகாரத்தைப் பறிகொடுத்த துப்பறியும் இலாகாவினரையே கேட்டிருக்கின்றனராம்!

கடந்த வார இறுதியில் அலுவலகத்தைச் சுத்தம் செய்தவர்களே கடிகாரத்தை அடித்துக் கொண்டுபோயிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறதாம்!

கழகக் கூட்டங்கள்

★

இரையமங்கலம்:
(திருச்செங்கோடு வட்டம்)
சந்தைப்பேட்டைமைதானத்தில்
18—10—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எஸ். அப்பாவு
எஸ். எம். எஸ். இப்ராகிம்

★

வேம்படிதாளம்:
18—10—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: நா. கந்தசாமி
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
கே. எஸ். மணி
கே. எஸ். அமிர்தம்

★

திருநள்ளாறு:
தேரடியில்
17—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: நா. இராமசாமி
பேசுவோர்:
போன். தருமன்
சி. ஜம்பு
என். அசோகன்

நண்பர்கள் கழகத் திறப்பு விழா

இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்வார்

18—10—57 மாலை 6மணிக்கு சென்னை—வண்ணை, இராமானுச அய்யர் தெருவில் (தியாகராயர் கல்லூரி பின்புறம்) தோழர் மா. அழகிரி தலைமையில் நடைபெறும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேற்படி கழகத்தைத் திறந்து வைப்பார்; தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., தோழர்கள் என். சிவரத்தினம், கே. எம். கண்ணபிரான் ஆகியோர் பேசுவர்.

தீபாவளிக்கென சலுகை இல்லை!

சென்னை, அக். 14—

சென்ற ஆண்டுகளைப்போன்று கைத்தறி ஆடைகளுக்கு வழங்கப்படும் கழிவுத் தொகை தீபாவளிக்கென அதிகமாக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறி நெசவாளர் சங்கங்களின் விற்பனை நிலையத்தில் வழக்கம்போல ஒன்பது புதிய காசுகள் மட்டுமே ஒவ்வொரு ரூபாய்க்கும் கழிவுத் தொகையாகத் தரப்படும்.

மாவட்ட மன்ற ஊழியர்களுக்கு தீபாவளி முன்பணம்

சென்னை, அக். 16—

என். ஜி. ஓ.-வினருக்கு அளிக்கப்பட்டுள்ள ரீதியில் மாவட்ட ஆட்சிமன்றங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் 'தீபாவளி'யை முன்னிட்டு முன்பணம் வழங்க மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரிகோணமலை கடற்படைத்தளம்

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது

திரிகோணமலை, அக். 16—

கடந்த 400 ஆண்டுகளாக டச்சு, பிரெஞ்சு, போர்ச்சுகீசு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தில் அடுத்தடுத்து இருந்துவந்ததும் உலகிலேயே சிறந்த இயற்கை நங்கூர வசதியுள்ளதுமான துறைமுகங்களில ஒன்றாக விளங்கும் திரிகோணமலை கடற்படைத் தளத்தை நேற்று காலை 10-30 மணியளவில் பிரிட்டனிடமிருந்து இலங்கை வசப்படுத்திக்கொண்டது; பிரிட்டிஷ் கடற்படையின் கொடி இறக்கப்பட்டு இலங்கைக் கப்பற்படையின் கொடி பறக்கவிடப்பட்டது.

பொதுச்செயலாளர் எழுப்பும் வினா

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிரிவினைக் கிளர்ச்சி இந்த அளவுக்கு வலுப்பெற்றதற்குக் காரணமே இந்தி மொழிதான்.

"ஆங்கிலமே பொது மொழியாக இருக்கலாம் என்று கே.எம். முன்ஷி கூறுகிறார். வடநாட்டிலும் இந்தியை எதிர்க்கிறார்கள். டாக்டர் சுப்பராயனுக்குக்கூட இந்தி மொழி எதிர்ப்பு உணர்ச்சி ஏற்பட்டுள்ளது; மத்திய சர்க்கார் எண்ணத்திற்கிணங்கவே மொழிக் கமிஷன் அறிக்கையில் தானும் எழுதியதாக டாக்டர் சுப்பராயன் கூறியிருக்கிறார்.

"1965-க்குள் இந்தியை தேசிய மொழியாக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள்; இந்தச் சட்டம் அரசியல் நிர்ணய சபையால் ஏற்படுத்தப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களா அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தார்கள்?

"இந்தியை ஆட்சி மொழியாக்குவதை 1990 வரை ஒத்திப்போடுமாறு நேருவுக்கு தென்னாட்டுக் காங்கிரஸ் எம். பி.-க்கள் மனுக் கொடுத்தார்கள். இப்போதைக்கு இந்தி வராமல் இருந்தால் போதும் என்ற உணர்ச்சியாவது தென்னாட்டுக் காங்கிரஸ் எம்.பி.-க்களுக்கு ஏற்பட்டுள்ளதே!

"இந்தியைப் பற்றிய பிரச்சினை வந்தபோது, இந்திக்கு ஆதரவாக 78 ஓட்டுகளும், எதிர்ப்பாக 78 ஓட்டுகளும் கிடைத்தன. இரண்டாந் தடவையாகவும் இந்திக்கு ஆதரவாக 78 ஓட்டுகளும் எதிர்ப்பாக 78 ஓட்டுகளும் கிடைத்தன. மூன்றாம் தடவையில்தான் எதிர்ப்பாக 77 ஓட்டுகளும் ஆதரவாக 78 ஓட்டுகளும் கிடைத்ததால் இந்தி தேசிய மொழியாக வேண்டும் என்ற முடிவு (ஒரு ஓட்டு வித்தியாசத்தில்) ஏற்பட்டது. இந்தி மொழிக்கு எதிர்ப்பாக நேருகூட அப்பொழுது ஓட்டளித்து இருக்கிறார்; 'இந்தியை மெதுவாகவே ஆட்சி மொழியாக்க வேண்டும்' என்று நேரு சொன்னார். நாட்டின் மொழிப் பிரச்சினையை ஒரு ஓட்டு வித்தியாசத்திலா முடிவு செய்வது? மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அங்கத்தினர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்று செய்த முடிவிற்காக நாம் இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? அரசியல் நிர்ணய சபையில் இந்திக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் கிடைத்த ஓட்டுகள் விபரம்பற்றி அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்த மதுரை கிருஷ்ணசாமி பாரதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் 'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்.

"இந்தியாவில் உள்ள 36 கோடி மக்களில் இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளை சுமார் 15 கோடி மக்கள் பேசுகிறார்கள்; இந்தி மொழியை மட்டும் 11 கோடி மக்களதான் பேசுகிறார்கள். 25 கோடி மக்கள் இந்தி அல்லாத மற்ற மொழிகளைப் பேசுகிறார்கள். மொத்தம் உள்ள 36 கோடி மக்களில் 11 கோடி மக்கள்தானே இந்தி பேசுகிறார்கள்? அதிக மக்கள் இந்தி பேசுவதாக காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்களே 11 கோடி மக்கள்தான் இந்தியாவில் அதிக மக்களா?

"இந்தி மொழி விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவாது; இந்தி மொழியில் வளமில்லை; எந்த விதத்திலும் தமிழ் மொழியைவிட இந்தி மொழி சிறந்ததல்ல; பண்டைய மொழியுமல்ல. இந்தி!

"சமீபத்தில் ஏற்பட்ட மொழிதான் இந்தி; அது இன்னும் வளர்ச்சி பெறவில்லை; இந்தி மொழி, தானாகவும் வளரவில்லை. இந்தி மொழியைக் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து உற்பத்தி செய்கிறார்கள்; எந்த விதத்தில் தமிழைவிட இந்திமொழி சிறந்தது?

"தபால் கார்டிலும், மணி ஆர்டர் பாரத்திலும் இந்தியை அச்சடித்து இருக்கிறார்கள், யாருக்குப் புரிகிறது அந்த மொழி? தமிழ் நாட்டில் தமிழில் அச்சடித்த கார்டுகளையும், மணி ஆர்டர் பாரங்களையும் ஏன் வினியோகிக்கக் கூடாது?

1937-ல், இந்தியைக் கொண்டு வந்த இராசகோபாலாச்சாரியாரே இந்தியை எதிர்க்கிறார்; இந்தியைத் தமிழ் நாட்டில் புகுத்த நாம் அனுமதிக்கக் கூடாது என்று கூறுகிறார்.

"தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஆட்சி மொழியாக தமிழை வைத்துக்கொள்ள வேண்டும். பிற மாகாணத் தொடர்புக்கும் உலகத் தொடர்புக்கும் ஆங்கிலத்தை நாம் வைத்துக்கொள்ள விரும்புகிறோம்; எந்தவிதத்திலும் ஆங்கிலத்திற்கு இந்தி ஈடாகாது. வெள்ளையர் நம்மை இப்பொழுது எவ்வகையிலும் வற்புறுத்தி ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளச் சொல்லவில்லை; நாமாக விரும்பி ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளுகிறோம்; ஆனால், இந்தியை வைத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். எந்தக் காரியமும் விரும்பிச் செய்யப்பட வேண்டுமே தவிர கட்டாயப்படுத்தப்பட்டு செய்யக் கூடாது.

"சென்னையில் இதுவரையில் 20-கிலோவாட் சக்தியுள்ள ரேடியோ நிலையம்தான் இருந்தது. இப்பொழுது 100-கிலோவாட் சக்தியுள்ளதாக அந்த ரேடியோ நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ரேடியோ நிலையத்தில் 5½-மணிநேரத்தில் ஒரு நிமிட நேரம்தான் தமிழ் நிகழ்ச்சி ஒலி பரப்பப்படுகிறது.

"தமிழுக்கு எவ்வளவு கெடுதல் செய்ய முடியுமோ அவ்வளவு கெடுதல்களையும் வடநாட்டு ஏகாதிபத்தியம் செய்கிறது. ரேடியோவில் தமிழ் ஒலிபரப்புக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மிகக் குறைந்த நேரத்தை எதிர்த்தும், அதை அதிகப்படுத்துமாறு கோரியும்ரேடியோ உயர் அதிகாரியிடம் தி. மு. க. சார்பில் நானும் வழக்கறிஞர் வி. பி. ராமனும் ஒரு மனு கொடுத்தோம்.

'பள்ளிக்கூடத்திலும் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்த திட்டமிட்டுள்ளார்கள். கட்டாயமாகப் புகுத்தப்படும் இந்தியை நாம் எதிர்த்தே ஆகவேண்டும்; 1937-ல் செய்ததுபோல் மீண்டும் இந்தியை தமிழ் நாட்டை விட்டு விரட்டியாக வேண்டும். அதற்காக நீங்கள் ஒன்றுபட்டு காரியங்களை செய்ய வேண்டும்.

நெடுஞ்செழியன் அவர்கள் தேர்தல் வழக்கு நிதிக்காக கூட்டத்தில் ரூ. 175—4—11 நிதி திரட்டப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தில் இயக்கப் பாடல்களை உளுந்தூர்ப்பேட்டை கே. டி. நித்தியானந்தன் பாடினார். (ந—தி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.